391

உ

பரமபதிதுணை.

ஸ்ரீபாலஷண்முகக்கடவுள்மீது
இனிய சிருங்காரத்திருப்புகழ், சிந்து, பார்ஸி முதலிய
விக்கிதச் சந்தவர்ணமெட்டுகளடங்கிய

புதிய

பக்திரசக் கீர்த்தனங்கள்.

இஃது,

யாழ்ப்பாணம் ம-ா-ா-ஸ்ரீ சரவணச்சாமியவர்கள்
மாணாக்கரிலொருவரான
மதுராமாநகர்
முத்தமிழ் வித்வான் சந்தச்சரபம்
ராஜபார்ட் மகா-ா-ா-ஸ்ரீ

M. S. சண்முகதாஸ் அவர்கள்

இயற்றியதை

மதுரை வித்வான் மகா-ா-ா-ஸ்ரீ
கலியாணசுந்தரம்பிள்ளை யவர்களாற்
பார்வையிடப்பெற்று,

மதுரை புதுமண்டபம் புத்தகஷாப்
மு. கருப்பணபிள்ளையவர்களால்

மதுரை வடக்குமாசிவீதி
ஷண்முகவிலாச அச்சியந்திரசாலையிற்
பதிப்பிக்கப்பெற்றது.

1917.

விலை] [அணா-5

Registered Copy Right.

OFFICE OF THE REGISTRAR ... 3 MAY 1917 ... MADRAS

சுப்பிரமணியர்

உ

பரமபதி துணை.

ஸ்ரீபாலஷண்முகக்கடவுள்மீது
இனியசிருங்காரத் திருப்புகழ், சிந்து, பார்ஸிமுதலிய
விகசிதச் சந்த வர்ணமெட்டுக ளடங்கிய
புதிய

பக்திரசக்கீர்த்தனங்கள்.

விநாயகர் துதி.

நேரிசை—வெண்பா.

மின்னுமயில் வேலவன்மேல் மேன்மைமிகுங் கீர்த்தனங்கள்
பன்னரிய செந்தமிழாற் பாடுதற்கு—துன்னுவல்ல
பைக்கனிக்கு வந்தமைந்த பண்பன் றனதுதந்தைக்
கைக்கனிக்கு வந்தமைந்தன் காப்பு.

அறுசீரடியாசிரிய விருத்தம்.

பூவார்ந்தநற்கடுக்கையொடுபுனிற்றுப் பொலிமதியம்புனைந்துமிலக்
காவார்ந்த மதுரைநக ரமர்புனித னிருமலர்க்குக் கருதும் பாவை
பாவார்ந்தசொற்றலங்கனிசையணியமும்மதத்தன்பணைக்கைவேழச்
சேவார்ந்தமுகத்தவனினரவிந்தகற்பதத்தைச் சிறக்கக்கொள்வாம்.

இராகம் கலியாணி தாளம் ரூபகம்.

பல்லவி.

பாசாங்குசதர பரமநிதி மக
பதிதுதிமணி மரகதகஜ முககதி பசுபதி யிதுததி.

அநுபல்லவி.

ஆசாபாசவலையைப் போக்கி
ஆளாயகிலந்தனை நீக்கி
வாசாசண்முகனைக்கை தூக்கி
வாழ்த்திடுவாயுந்தன் ஞானக்கண் ணோக்கி (பா)

சரணம்.

வடிவுடைய வத்தியை யுரித்தோன்
சடைமுடிதனை யன்று விரித்தோன்
திடமுடன் மான்மழு தரித்தோன்
திரிபுரந் தனைச்சிரித் தெரித்தோன்
சித்திரவிடையதன்னிலனுதினம்
நத்தியே வித்தகமாக வுமையவ
ளத்தினமுஞ் சித்தமுட னுத்தமியாள்
மெத்தவு முத்தமளிக்கு மத்திமுக. (பா)

கலைவாணி ஆதி.

மயிலே மடப்பிடி யேகொடி யேயிளை மான்பிணையே
குயிலே பசுங்கிளி யேயன்ன மேமனக் கூரிருட்கோர்
வெயிலே நிலவெழு மேனிமின் னேயினி வேறுதவம்
பயிலேன் மகிழ்ந்து பணிவே னுனதுபொற் பாதங்களே.

சந்த்ராசரசமதலோலா என்ற வர்ணமேட்டு.

இராகம் தேசிகம் தாளம் ஆதி.

கண்ணிகள்.

மலர் வாணி தயாநிதியென் தாயே வர
மருள் புரிந்திடு வாயே வஞ்சக
மாற்றி யாள்வாய் நீயே
வாடினே னுன் சே[illegible]. (வா)

அம்மா வீணை வையகந்தனி லுழன்[illegible]
வேண்டினே னறிவு தழன்று வினையால்
வீறு மையலிற் சுழன்று
வெகுளியென நுழன்று (வா)

உந்தன் சித்த மிரங்கியெனைக் காப்பாய்.
சிறியேன் பெருந்துயர் தீர்ப்பாய் தேடியே
தினந் துதித்தேன் யேர்ப்பாய்
செல்வி யேகண் பார்ப்பாய். (வா)

திணம் பக்தர்துதி மதுரை வாசன்
பண்பா டிடும்ப்ர காசன் பாவலன்
பாலன் ஷண்முக தாசன்
பக்தி மிகு நேசன் (வா)

சோமசுந்தரக்கடவுள் துதி.

விருத்தம்.

சடைமுடி யுடன்கங்கை படபடன வதிரசர்
வண்ட மெங்கும்
கடன்மடை திறந்துடன் கிடுகிடென வாடபொற்
காலி லிட்ட
அடையுடை சிலம்புஞ் குடுடுங்கிடத் தடதடென
வலரி நல்ல
படைகுடைக ளும்மதிர்ந் திடமுயல கன்மீது
பத மெடுத்தோன்.

அவதார புருஷன் என்ற வர்ணமெட்டு.

இராகம் - சங்கராபரணம், தாளம் - ஆதி

பல்லவி.

பரமன் நடனம் பார்த்தோர்கள் மகிழவந்த
பர்வமதி தானணிந்த

அநுபல்லவி.

திருமுக மிலகிடு சுரநதி யெனுங்கனி
சிரமதி லணிசடை யாளன்
சிவ காமிம ணாளன். (பர)

சரணங்கள்.

அதி பக்தியில்மி குத்தசுத்த
சித்தர்கள்பு கழுந்தில்லைப் (பர)

எழில் பதத்தைப் பதத்தோ டெடுத்து முயலகன்
சடத்தை மிதித்துக் குதித்து ஆடிய. (பர)

அம்பிகை யிருகரந் தாளங்கள் போட
அவனிய ளந்தவன்மத் தாளங்கை நாட
உமபர்களயாவரும் வாழ்த்திக்கொண்டாட
உழுவை பதஞ்சலியு முவந்து கூத்தாட
உலவும்படி சபையி
லிலக நடன மிடும்
ஓதுமறை நாதன்பரப் போதன் மலர்ப்பாதன் அந்தப் (பர)
பச்சை நிறத்தவ னச்சுதனுக்கிளை
சத்தி யளித்திடு மத்தி களித்திட (பர)

பொன்னம்பல மன்றினி லாடிய நேசம்
புலவரொடு விஞ்சைய ரின் விசுவாசம்
புன்னகை யுடன்வெகு போதர்கள் வாசம்
புகழுயாரால் முடியும் நடனப்ர வேசம்
புகலுஞ் சிங்க வாகனி
யகலப்ப தமெடுத்த
போசனருள் நேசன் தில்லை வாசன் நடராஜன் அந்தப் (பர)
பக்தியுறத்தினம் நத்தியிரைஞ்சிடும்
வித்தகஷண்முக தாசன் துதித்திடும்
இத்தலமீதினி லெங்குமுல விடும்
உத்தமனுகிய கத்தனெனச்சொலும் (பர)

இராகம் - சங்கராபரணம், தாளம் - ரூபகம்
பல்லவி.
வாவாயெங்கும் வழங்கும்நற்கீர்த்தி முன்னம்
வைகையையடைக்கவந்த சொக்கலிங்கமூர்த்தி.

அநுபல்லவி.
தேவர் சிறுவனென் முன்வருவாய்
சீக்கிர முன்பதங் கொடுத்தருளுவாய்
சிரித்து முப்புர
மெரித்து வத்தியை
யுரித்து மெத்தெனத்
தரித்து நின்றவா. (வா)

ஆலகால விஷந்தனை யுண்டவா
ஆடரவந்தன்னையணி யாய்ப் பூண்டவா
அகத்தி ருந்தெனை
மிகுத்த நற்கவி
தொடுத்துப் பாடிட
வெடுத்துத் தந்திட. (வா)

கோலமாமயி லவனையீன்றவா
கோதிலாத்தமி ழுதனைச்சார்ந்தவா
குறித்து மின்பதம்
பொருத்தி யென்றனைத்
திருத்தி டத்தகு
சிரத்தைநீ கொள. (வா)

தாளமாமணி முடியுந்தாளுமே
தாழாதெனக் களியின்னாளுமே
தவிர்த்து வந்திடு
முரித்த மக்களை
யெடுத்த ணைத்திடு
மடுத்த தாயென. (வா)

மாமதுரைப்பாண்டி நகரின்வாசன்
மைந்தன்செந்தமிழ்ச் சண்முகதாசன்
மகத்த தாகியுன்
சிவத்த நற்பத
மகத்த முத்திட
யுகத்த நற்றவன் (வா)

முருகன் திருமால் மருகன் என்ற வர்ணமெட்டில்

வேறு சந்தம்.

இராகம் - அடாணா; தாளம் - ரூபகம்.

பல்லவி.

பரமனெனு மோர்பெருமான் நடனம் - எங்கும் —
பற்றலாற்றிடச் செற்றகுணாகர.

அநுபல்லவி.

உரகம்பதஞ்சலி யோதுமுழுவையு
முலவும்படி யிலகும்முய லகனின்னுட லிரியும்படி (பர)

சரணங்கள்.

பொன்னுலவும்பதி நன்னயமாயொளிர்
போதநதி தீரன்—இந்தப்
பூதலமாதியங் காதலுடன்பணி
பூமனெழில் வீரன்
கன்னியுமையவ னுன்னிதமாமிக்
ககனம்படி மதிவிஞ்சைய
ரிசையும்பிர மனுமண்டிட (பர)

தேசிகனாகிய மாதவன்மத்தளந்
தீவிரமாய் முழங்க—ப்ரம்ம
தேவனுமங்கன மாவனுடன்பாடுஞ்
சீருந்திசை யலங்க
காசினியெங்கினும் நேசமடைந்திட
கருதும்பல விருதுங்கொடு
யொளியொன்றிட வளருந்திரு. (பர)

காளியுடனேவா தாடிநடக்கைபிற
காதிற்குழை விடுக்க—எங்கள்
காரணனாகிய பூரணன்நடிக்குங்
காலதனை யெடுக்க
ஆளியேறுஞ்சூலி நாணிப்புறஞ்செல
அனலேரிட சினமாகவே
பதியாகிய பதமேறிட. (பர)

சேணுயருமதி சேருமதுரையிற்
திகழுமந்த காசன்—தமிட்
சேயனும்ஷண்முகன் செப்புந்தமிட்கருள்
செய்திடுஞ்சொக் கேசன்
மாணும்புலவர்கள் காணும்படியொளிர்
மயிலுக்கொமு வயிலுங்கொடு
சிவகந்தனு மகிழ்கொண்டிட. (பர)

இசைந்த ஏறுங் கரியுரி என்ற வர்ணமெட்டு.

இராகம் - தேசிகம், தாளம் - ஆதி

கண்ணிகள்.

சிறந்தமாதவர் தினமடி பரவிடு முதல்வோனே—எழில்
சிவந்தமாமதி பளபளவெனசடை புனைவோனே
கறங்குமின்னலுங் கதிரொளிபோலுமுன் றிருமேனி—முன்
கனன்றுமதனையுந் திரிபுரமெரிபடச் செயுஞானி
இலங்குகொன்றையு விரிபடவரவமு மணிவோனே—தின
மிணங்குமின்பத மெழில்பெறுவோர்மன மமர்வோனே
துலங்குமாலயன் தேடரிதாகிய பெருஞ்சோதி—அதி
சுகந்தபரிமள மணிமலைமகளிட முறும்பாதி
அலங்குசோலைகள் செறிதருமதுரையி லமர்வோனே—என
தணங்குசென்றிட விடையினிலொளியுடன்வருவோனே
கலங்கவேநமன் கால்கொடுசடமதி லுதைத்தோனே—தமி
கழறுசெந்தமிழ்ஷண் முகன்றனக் கருள் பெருமானே.

மீனாக்ஷியம்மன் துதி.

விருத்தம்.

முத்தரொடு சித்தர்முனி யுலகுதுதி மகமாயி
முருகாயி பிரணவத்தி
முச்சுடரே யானந்தி மோகனவ சிகரியே
மூவர்புக ழுங்குமாரி
சித்தமுறு பாண்டியன் மகளாயு தித்துநற்
செங்கோல்செ லுத்துவீரி
திடமருவு தாருகா சுரனைமுன் னேகொன்று
ஜெயமுற்ற விமலைசூரி.
சத்திவே லாயுதங் கைக்கொண்டு துட்டரைச்
சம்ஹரித் துலகமெல்லாந்

தானுயி ருந்தருண வொளிமேவு பலிபீடத்
தையலொடு காளி யெனவே
மத்தமம் மிகுமுத்து வீரன்வடி வேலவன்
வணங்குமுடி மன்னர்தாழ
வளர்மதுரை யரசியே சொக்கேசர் பாகமுறு
மரகதமீ னுக்ஷியுமையே.

இராகம் - நாதநாமக்கிரியை, தாளம் - ஆதி.

பல்லவி.

மதுரைமீ னுக்ஷி —உன்
மைந்தனுக்குமேநற் காக்ஷி
தந்தருள்நிறைந்த மாக்ஷி

அநுபல்லவி.

பதுமநிதி யுடைய தொருநற் சூக்ஷி
மதுரத்தமிழருளுங் க்ருபாக டாக்ஷி
இதுபெருவாது யென்னுலாது
இருந்திடப் புவிமீது—தகாது
எந்நிழையே ீயோது—பாது
காத்திடக் குறையேது - எனக்
காதரியே. திருமால் சகோதரியே. (மது)

சரணங்கள்.

சொக்கேசர் பாரி—வெகு
சுந்தரமிகுந்த விந்தைக்
கந்தனையீன்ற சிங்காரி. (சொ)
தக்கமதி முச்சுடரே யுபகாரி
பக்கத்துணை செய்திடலே பெருவாரி
சிக்கென வினையதில் நிற்கவைத்தாயெனை
சிறிது மறியலையோ
அறியேன்படுந் துயர்மலையோ
அறிந்தருள்தர வெகுதலையோ—எனக்

காருந்துணை யிலையிப்
பாரிலிது தருமோ (மது)

முத்தர்பணி பாதம்—தந்து
வித்தகன்சண் முகனுக்க
ளித்திடுவ ரப்ரசாதம். (மு)

சித்தமிரங் காதிருப்பதுவோ-நீதம்
இத்தனைசொல்லி பித்தன்மீதிலேன்-வாதம்
நித்தமுன்மலரடி தனைப்பணிந்திட-யான்
நீயிரங்கக் கூடாதா
நெடுநாளா யென்மேல்வாதா
நின்றன் மனமென்னவுருகாதா
நிறைமா மலரேபொற்
றாமரை சூழ்ந்திடு. (மது)

கந்தாவந்தெனைக் காவையா என்ற வர்ணமெட்டு.

இராகம் - ஆனந்தபைரவி, தாளம் - ரூபகம்.

பல்லவி.

அம்பாளெந்தனைக் காவம்மா
அடியேனையா ளம்மா.

அநுபல்லவி.

நம்பியுனை நினைந்து வெம்பி மிகவலைந்து
தம்பமெனப்பணிந்தேன் சம்புவிடத்தமர்ந்த
நங்கையாளு மையே
நனியே கனிவாய்—கலை
நலமதனை யமையே
நயந்தாள் பயந்தேன்—திட
நடனமிடுப வளே
நரையேன் குறையோ
நல்லிமைய மலைமகளே—மிக்க

நலிந்து தினந்தொறு மெலிந்த பிறவியை
நயந்து வொழித்துமு னுயர்ந்த பதத்திலே
நாயகமாகிவந்து நேயமதாய்ப்புகழ்ந்த
சேயனெனவெனக்குச் சிறக்கவருள் தரும்
திங்களோடொரு கங்கையுஞ்சிரந்
தங்கமார்பினிற் சங்கமாசுணை
முந்துலங்கிட தங்குவோன்பெருந்
தேவியே என
தாவியே யுனைக்
கூவியே கொடும்
பந்தம்னைந்திட வந்துநொந்தென
கந்தமேற்பட வுங்கரைந்துன
தின்பதங்கனி யந்திசந்தியு
பத்தியுற்றுச் சத்தமிட்டு
தத்தியெமுட் டிச்சிரத்துட்
பக்ஷமுற்றிட யானுமே—அடி
யேனுமே னனை
யாளுமே உடன்
கடுத்துவெதிர்த்திடு மவுணர்குலங்கெட
தொடுத்துவேலினை யெடுத்துக்கெடுத்திடுங்
கந்தனெனநற் செந்தின்மாநகர்
வந்தவேலனே மந்தமின்னெளிர்
கந்துகமெனு விந்தையாகிய
சுத்தமயிலினை யித்தம்வருந்திடும்
பத்தனெனதிட முத்தமியேவாச்
சொலு வாயே
மலை யாயே
நிலை தாயே
கலை நீயே
நிச்சயமுந்தனையென் பக்ஷமுடனேயின்று
அச்சுதனுக்கிளைய வாரணியேமுன்னின்று
மெச்சிடுஞ்சண்முகன் றன்னிச்சைக்கருள்வாய்நன்று. (அ)

திருமால் துதி.

விருத்தம்.

மாயனே நீமுன்ன மாயர்மனைப் பெண்களை
மாறிமா றிப்பிடித்தாய்
மங்களத் தோடுனது தங்கைமீ ரக்ஷிதனை
மகிழ்சங்க ரற்களித்தாய்
நேயமது போலவே கஞ்சரவ மீதினில்
நீசென்று மேபடுத்தாய்
நினைக்கொரு மடியாரை ரக்ஷிக்க நீசங்கு
சக்கரங் கைப்பிடித்தாய்
காயமது வுள்ளவரை பஞ்சவர்க் கேற்படுங்
கனவினைக ளைமடித்தாய்
காசினியி லேபுகழு ராவணகு லத்தையொரு
கடுகிமிட மேயடித்தாய்
ஞாயமெனக் கற்பாரை யகலிகைக் கேமுன்னம்
நன்மோக்ஷ மேகொடுத்தாய்
நாளுமுனை நம்பவெங் கோனேவந் தாளுவாய்
நரசிங்க மாமூர்த்தியே.

பாலபிஹ-பவேஹையசூரத் என்ற வர்ணமெட்டு.
இராகம்-இந்துஸ்தான்பியாக், தாளம்-ஆதி.

பல்லவி.

நந்த கோவிந்த முகுந்தா முரஹரியே
நம்பி னேனருட் குகந்தா திருமறையே.

அநுபல்லவி.

பந்தப்ரபந்த வடிவே பக்திமிகுந்த
பஞ்சவர்களின் முடிவே முக்திவைகுந்த. (நந்)

பின்மகுடம்.

பருவரைபதிலிரு பதுகர மதுபட
வரும்பெருகிரி சரபரவென முறையிட

பத்தி மனத்தேடே டுத்த
வித்தக ராவணன் சித்த
மெத்தவும் பதறிக் கத்த
பத்து சிரத்தைய றுத்த
பச்சைநிறமுகில் வண்ணா மனமகிழ்ந்தேன்
னிச்சைக்கருள்மலர்க் கண்ணா தினம்பணிந்தேன் (ந)

தோகையரு.

கோபிகாஸ்திரீ மோகனே பரந்தாமனே கோபாலனே.
கோமளசிங் காரனே—திகழ்
வாமனஅவ தாரனே—புகழ்
ராமனேக்ருபா கரனே—இனி
தாமதமேன் ஷண்முகனேயாள். (ந)

இப்படிப்புலம்புவதுமேன் என்றவர்ணமெட்டில்.

வேறு சந்தம்.

இராகம்-மத்தியமாவதி-தாளம்-ஆதி.

பல்லவி.

ராமாரகுபூபதி நீயே—உந்த
னுமமலரதயேதொழுதேன் தாமதமேனித்ததியே (ரா)

அநுபல்லவி.

மாமிகுமாராமாத்தை தாமதிக்காமற்குறித்தே
பூமியில்வி முத்தெறித்த
போதாபொற்பாதாப்ரக் யாதாவரந்தாஸ்ரீ (ரா)

ஆதரித்தாய் பஞ்சவரை
பாதகத்த; ரித்துயிரை
சாதகத்தி லேபதித்த
சந்தாப்ர பந்தாவை குந்தாகோ விந்தாஸ்ரீ (ரா)

எத்திசையி லும்புகழ
வத்தியின்ம னங்கவிழ

முத்தியளித் தாய்மகிழ
மோகாகோபிகாஸ்திரி போகாபொற்பாகாஸ்ரீ (ரா)
ஆயர்மனே வெண்ணெ தனே
பாயமதா யுண்ணவனே
காயமத ழியுமுன்னே
கார்த்தருள்வாய் ஷண்முகனே (ரா)

ஆண்டவனே நாகூர் என்றவர்னமெட்டு.

இராகம்-காபி-தாளம்-ஆதி.

பல்லவி.

ராமதயாளா ரகுபதி ராமதயாளா உமை
நம்பினேனே யித்தருதி வந்தாளுங் குணாளா
மங்கைசீ தாமணவாளா.

அநுபல்லவி.

வாமன அவதாரா வரந்தா பரந்தாமா
வாருஞ் சர்வ பூமா
கோரினேனே நேமா
வையகத்தின்றையல் மையல் வாதையால் வாடி
யுனதருள் தனேப் பாடி
மயங்கியேதினந் தேடி
வந்தேன்பதஞ் செந்தாமரை தந்தாள்வை குந்தமுகுந்த. (ரா)

சாமளரூபா ததிகிதி சாமளரூபா
சர்வண்டபிண்ட மெங்குமுள் ளடக்கியகிர்பா
தசரதபாலனே நிர்பா
காமன்றனே யெரித்த கடவுளர்க்கே மைத்துன
கிர்த்தன
காகூதி தரும் சுத்தன
பூர்த்திபெருஞ்
காலெடுத்துக் காளிங்கநடம் புரிந்தவா
மைந்தனேக் கார்த்தருள் தேவா
கடைக்கண் பார்த்திட வாவா
கடவோவினே படவோமனச் சடவோ திடமேன்வராது. (ரா)

ஆலிலைபங்கா எனைவர் தாதரிரங்கா
அரக்கன் ராவணன் சிரமறுத்திடுந் துங்கா
ஆதரியேநர சிங்கா
வாலிதிரமறுத்த வாஹரி கேசவனே
வளர்கருட வாகனனே
வாதைக்குள் ளாகினனே
வஞ்சகஞ்சனை வதைத்துச் சஞ்சலந் தீர்த்தாய்
பஞ்சவர்களைக் கார்த்தாய்
அஞ்சல்மேல்துகில் தந்தாய்
ஹரியேமுர ஹரியே மறைமுறையே ஷண்முகனை யாளும். (ரா)

ஸ்ரீபாலஷண்முகக்கடவுள் பக்திரசக்கீர்த்தனம்.

ஆசிரிய விருத்தம்.

தேவருல கிடேற வசுரர்களை வாட்டிய
ஜெயமுடைய வெற்றி வேலுஞ்
சிற்சொரூப மாங்கனிக் காகவலம் வந்தவுன்
திருநடன நீல மயிலுந்
தெய்வீக மாயுன தருட்கொடிய தாயதிக்
சிருடைய சேவ லொலியுஞ்
செப்பரும் புகழுடைய நவவீர ரனுதினஞ்
சேர்ந்துநின் றேவல் புரிய
மூவர்புகழ் பாரியர்கள் நீங்காம லனுதினம்
முறைமையா யருகி ருக்க
மூர்த்திக ரித்தெழுந் துலகுதனில் யாவர்க்கு
முதன்மையுள தெய்வ மாகி
மூவுலகு ளோர்களும் போற்றியே பணிசெய்ய
முத்திதரு பால னாகி
முன்னத வயிலேந்தி யரசுபுரி கந்தநும்
முளரிநிகர் பாத மலரை

யாவரும் போற்றியே யன்புபெற் றூரென்ற
　　வாசையா லேழை யுந்த
னுறெழுத் தோதியு மன்புறப் பாடியும்
　　அருளுதவ வேண்டு மென்ன
அருச்சித்துப் போற்றியுன் னருமறைப் பாதத்தை
　　யாசித்த ருத்ர கோடி
யானந்த மெய்திடவு நன்கருளு வாயோது
　　மடியவர்க் கருள் தெய்வமே
பாவலவ ஷண்முக தாசன்பணி பாதனே
　　பணிவுளோர்க் கருள் நீதனே
பண்புடைய வேலனே பக்தானு கூலனே
　　பரமன்மகி ழுமை பாலனே
பாதிமதி சடையனுற் கொருமொழி பகர்ந்தவா
　　பக்ஷம்வைத் தெனை யாளுவாய்
பழனிபெற வலம்வந்த வழகுதிகழ் நிறைசொந்த
　　பழனிமலை யுறை கந்தனே.

இராகம் - தோடி, தாளம் - ரூபகம்.

பல்லவி:

திருப்பழனிப் பதியில்வாழ் வேலய்யா
சிறியேனை வந்தாள் நல்லகாளய்யா.

அநுபல்லவி.

அருவினைகளை யகற்றுவாய்நீயே
ஆறுமுகத்தோடு வந்தசூரனையே
　　வேல்கொடு மார்பினிற் குத்தி யெறிந்தாயே
　　வீரனே தீரனே சூரனே மாரனே
　　மயிலலங் காரனே. (திரு)

குருவாய்பரனுக் குபதேசித்தவனே
குறமடமாது வள்ளிநேசனே. (கு)
வருவாய்கோலமயி லேறியேவரம்
தருவாய்நம்பினே னித்தநியுன்பாரம்

அறமாய்வந்திடுங் க்ரௌஞ்சனின்சிரம்
அடிபடபொடிபட சடமதுயெடுபட
துடிபட மடித்திடுந். (திரு)

ஏனோயின்னமுந் தாமதஞ்செய்கிறாய்
இனியேஎனையே பாராய்
வானோர்கள்பணி தேனேயுந்தனை
யரனேயெப்போதுஞ் செய்வதேசிந்தனை
கோனேயென்று பணிந்தேனேகந்தனே
குருபரசரவண முருகனேயறுமுக
பன்னிரு கரத்தனே. (திரு)

கானக்குறத்திதேன் தினை மாவையுண்டாய்
கனவேலனே லோலனே பண்டாய்
மானைத்துரத்தி ஞானவேடனாய்
மனமகிழ்வள்ளிக்கு முன்பாகநீபோனாய்
வேணதோர்வேடராய் வேங்கைமரமானாய்
வித்தகஷண்முக தாசனே
நித்தங்கண்பார் முருகேசனே. (திரு)

இராகம் — இந்துஸ்தான் பியாக், தாளம் — ஆதி.

பல்லவி.

திருப்பரங்கிரிவாழ் ஷண்முகனே
சிறியேனைவந்தாண்டிடு வாய்குகனே.

அநுபல்லவி.

அருள்தரவிதுதரு யண்டினேன்தேவா
அன்புடன்மயின்மிசை யனுதினம்வாவா
திறமுடனுன்பதம் பணிந்தேன்காவா
சீமானே பூமானே கோனே
கோமானே நம்பி னேனேவா. (திரு)

சரணங்கள்.

குறவள்ளிமகிழ்ந்திடுங் கூர்வடிவேலா
பரகதியளித்திடும் பக்தரனுகூலா

வருக்கவறுமுக குருபரசீலா
வளசவுணர்கள்படை தனக்கொருகாலா
தருமறைமுடிவினின் றுடியலோலா
சக்தனே முத்தனே தேனே
நித்தமுங் கொண்டாடி னேனே. (திரு)

தாலமதிலேமாத ராசையால்வாடி
தயங்கிவருந்துகின்றேன் சாமியுனைநாடி
ஆளுமெந்தனை வந்து அரிதிருமருகோனே
அகத்தியமுனிக்கரு ளளித்தசீமானே
நாளுமுந்தனைமறவாத நான்தானே
நாதனே போதனே தேனே
வேதனைச் சிறை வைத்தோனே. (திரு)

காலன்வந்தணுகாமற் காருமுருகையா
பாலன்சண்முகனைக் கண்பாருமலர்க்கையா
ஆலகாலவிடத்தை யுண்டவன்போற்றும்
அரகரவரகரயென திசை யேற்றும்
ஞாலமதிலேதேவ ஞானிகள் சாற்றும் என்
னையனே மெய்யனே துய்யனே
அழகிய வேலுறு கையனே. (திரு)

ஜெகன்மோகனஸ்வரூப என்ற வர்ணமெட்டு.

இராகம் - இந்துஸ்தான் தோடி, தாளம் - ஆதி.

ஒ ர டி. பல்லவி.

சந்தாசலக்குமரவேலா ஷண்முகன்சாற்றும்
சிந்தாகுலந்தவிர்க்குமேலா தினமும்போற்றும்

அநுபல்லவி,

அந்தரிவாலாம்பிகைதரு நாதா
அறுமுகனுகவந்தருள்தரு போதா
வெந்திறலாக்கரைவாட்டிய நீதா
விரிமலர்சேவடியதுதர வாதா.

சரணம்.

நாடுபிணியகற்ற நேராய் நலமெனவே
நன்மையளித்திடக்கண் பாராய் நடம்புரிந்தே
யாடுமயிலின்மீது சீராய் அன்போடென்முன்
மன்னைதெய்வானையோடு-வாராய் அநுதினமும்
ஆண்டிட வேண்டினேன் டாண்டிய நகருடையோனே
அரவணிவோன்
அஞ்செவி தன்னிலே செஞ்சொற் புகன்றிடுவோனே
அஞ்சாதுமுன்னம்
அரக்கரின் செருக்கதைக் கறுக்கிடு மால்மருகோனே
அவுணசூரன்
அடமதைக் கெடுபடச் சடத்துயிர் மடித்திடுவோனே
அண்டர்கள் தினம்
அன்பேஎனதின்பேயென-பண்பாய்த்துதிநின்றேசெயுங்
அடியேனிடம் [கோனே
அடைவுடனெந்த னிடமினியின்று திடமுடனேவா
நொடியினிலே பூமானே ஐயோர்மண்மீது
ஆதாரமேதிலை பூதலமீதினிற் பாதாளுமினே
னேதுமிலாதுநின் ஞேனே ஐங்கரனுன
அத்திமு கத்திருக் கத்தன்ற னக்கிளை
வித்தகனேகர சத்தி வடிவேலோனே-அருணகிரி
அன்றுபுகன்றிடு துன்றுதமிழ்க்கொடு குன்றிலமர்ந்திடு
நன்றிமனத்துடை யோனே ஆரண்யஞ்சென்று
அஞ்சிகெஞ்சி வஞ்சிவள்ளி கொஞ்சுதற்கு
தஞ்சமென்று தானே அன்றுரைத்தோனே
அஞ்சல்மிகுத்துநான் கெஞ்சிநின்றேனே
அவனியடங்கலுமே யாதரிப்போனே
விஞ்சுமறைதனில் வீற்றிருப்போனே
வேதனதுசிர மோதுஞ் சீமானே. (சந்)

அச்சரிமோரி என்ற வர்ணமெட்டு.

இராகம் - இந்துஸ்தான் தோடி, தாளம் - ரூபகம்.

பல்லவி.

பூவுலகுளோர் போற்றும் புள்ளிமயில்வாகனு
வாகனு வள்ளி மோகனு.

அநுபல்லவி.

ஆவலுடன்றேடி அன்புடனேபாடி
ஆடியே நாடினே னாதரித்திடுவேலனே
வேலனே உமை பாலனே (பூ)

ஆலமதனையுண்ட நீலகண்டன் மகனே
ஆகாது யிது சூது ஆறுமாமுகத்தையனே
ஐயனே ஈராறு கையனே (பூ)

பாண்டிநகர்வாசன் பாலன்ஷண்முகதாசன்
பக்தனு முத்தம நித்தியபிர காசனே
ப்ரகாசனே சுயம்ப்ர காசனே (பூ)

ஆசிரியவிருத்தம்.

எத்தனை குற்றமோ பெற்றமகன் செய்தாலு
மின்பமெண்ணுவது மிலையோ
ஈசனுங் கண்ணப்ப னுக்குப்ப யந்தரு
மெச்சிலை யுண்ண விலையோ
பித்தனைப் போலபெரு வத்தியை யுரித்துமுன்
பேணியே யணியவிலையோ
பிரியமுடன் மார்க்கண்ட னுக்காக யேமனைப்
பின்வந்து தைக்க விலையோ
சத்தியஞ் செய்துமுன் சிறுத்தொண்ட னீய்ந்திடுஞ்
சாதம்பு சிக்க விலையோ
சன்மார்க்க நெறியுடைய விளையான்கு டிக்காக
சாதுபோற் செல்லவிலையோ

இத்தனையெ லாமிருந் திடவுங்கள் கூட்டமதில்
எனையாள மனமு மிலையோ
இதுவேளை யுனதுபதம் நம்பினே னென்னையாளு
மினியகதிர் காம வேலே.

மாதவா அந்த அல்லியை என்ற வர்ணமேட்டு.

இராகம் - செஞ்சுருட்டி, தாளம் - ஆதி.

கண்ணிகள்.

ஆறுமுக னேயெனையாளாய்
அருட்குணாளா ஆதரிதெய்வயானைமணாளா
அரகரசிவசரவணபவ பரமனுக்கருள்குமரனே-திரு
ஆசவள்ளி மான்மகிழ்மோகா
அரிமருகா யாருமேதுணைவேறிலைமுருகா. (ஆறு)

தாரணிதனி லுனக்கிணையேது
தகாதுவாது-தாயிருந்திடப்பிள்ளைக்கேன்தீது
தருணமுனதுபதபதைக்கொடு வருணகிரியின்கருணையான
தார்திருத்தணி வாழ்ந்திடும் மேலா
தற்பரனேசிலா தாமதித்திடஞாயமோவேலா. (ஆறு)

நாரணிபரி பூரணிமகனே
நம்பினேனுனேநாரதன் மகிழ்காரணக்குகனே
நறநறவென திரிபுரமதை-யரைநொடிதனிலெறித்திடும்பர
னாதனுக்கருள் போதனேவாதா
நளினப்ரக்யாதா நானிலமதில்சண்முகநாதா. (ஆறு)

நானிலத்தாசை துறந்தேன் என்ற
முத்துசாமிக் கவிராயரவர்கள் வர்ணமேட்டில்
வேறு சந்தம்.

இராகம் - ஆனந்தபைரவி, தாளம் - ரூபகம்.

பல்லவி.

கந்தாவந்தெனைக் காவையா
கதிர்வேல்முரு கையா.

அநுபல்லவி.

அந்தப்ரணவந்தன்னை வந்தேபரமனிடம்
விந்தையாகவேயன்ற றைந்தகுமாரதிரு
வள்ளிமோ கனனே
வருவாய் குறையேன் சிறு
வடிவுபா லகனே
வந்தாள் நொந்தேன் மெய்
வானோர்பணி குகனே
வரமே தருவாய் தெய்
வானைசர வணனே புகழ்

வடிவேலுனது பொற்பதத்தைக் கொடுத்தாள
வடியோனெனமன மகிழ்ந்தருள் தயாள
வாசையுடனேமயின் வாசியதனிலேறி
நேசமதாகவிசு வாசமாயெனைக்கோரி

அந்தமானவன் சொந்தமைந்தனும்
பந்தபாசத்திற் சிந்தைநொந்துக
ரைந்துவாடினேன் செந்தில்வாழ்ந்திடும்
பாலனே க்ருபை
வேலனே அநு
கூலனே

வஞ்சகஞ்சம ணஞ்சிரங்கள
ரஞ்சிமிஞ்சவ ரஞ்சிகெஞ்சிய
ழிஞ்சிக்ழுவினி நஞ்சிதுஞ்சிட
பத்தருக்திட் டுத்தமர்க்கூட்
டத்திலேகிட் டைக்குறித்துட்
சித்த முற்ற
பாதனே பரம
போதனே நவ
நீதனே

அரக்கர்குலமதை நெருக்கிப்பொடிபட
அடித்துமவர்களின் முடியையுடைத்திட
அஞ்சிடாதொரு பஞ்சபாதக
நெஞ்சசந்தனை சஞ்சலப்பட
தஞ்சமென்றழு வஞ்சராவணன்

பத்துசிரமது இற்றுவிழுந்திட
குத்தியறுத்திடு முத்திராகவன்
மருகோனே முருகோனே
சிறியேனே யுனையானே
பத்திமு றையுடனே
கத்திய ழைக்கத்தநி
சித்தமி ரங்கியருள்
செய்திடுவாய் பூபதி
வித்தகன் ஷண்முகதாசனைக்
காத்திடும் நீதி. (கந்தா)

கானமயிலேறும் பரனே என்ற வர்ணமெட்டு.

இராகம் - செஞ்சுருட்டி, தாளம் - ஆதி.

பல்லவி.

கங்கவரைவாழ் குமரையா
காரண மெய்யா.

அநுபல்லவி.

கங்கவரை வாழ்குமரா
செங்கைவடி வேல்முருகா
சிங்குங்கரு ணைக்கடல
ரங்கநகர் மால்மருகா. (கங்)

குஞ்சரிதி னைப்புனத்திற்
சஞ்சரிவள் ளிமகிழ
செஞ்சடைப்ப ரமனிடங்
கொஞ்சியுப தேசஞ்செய்த. (கங்)

கானவேட னாகிமுன்னங்
கானவரைக் கண்டவுட
னொருதொரு வேங்கைமர
மாகியொளிர் தாயேயுயர். (கங்)

தாங்கமயி லேறியொளிர்ந்
திங்குவரு வாய்சீமானே
எங்கும்புகழ்ந் திடுஞ்சண்மு
கந்தனைக்காத் திடுங்கோனே. (கங்)

[stamp]

எப்போ மனம்வருமோ என்ற வர்ணமெட்டு.

இராகம் - தோடி, தாளம் - ரூபகம்.

பல்லவி.

எக்காலத்தில் வருவாய் எந்தன்
துக்கமகற்றிட பக்கமதிலே நீ.

அநுபல்லவி.

முக்கண்ணான்றனக்கு தக்கதோர்பாலனே
முன்னவனுகிவி ளங்குஞ்சுசீலனே
உக்ரவேலைக்கையிற் கொள்மறைமூலனே
உருவே யருவே எங்குந்
திருவே குருவே யிங்கு. (எக்)

தஞ்சமெனநின்றேன் வஞ்சகஞ்செய்யாதே
தாமனேவந்தருள் மாயிலின்மீதே
கெஞ்சினேனென்குறை கேட்பாயிப்போதே
கீதனே நாதனே போதனே
நீதனே யேதினஞ் சோதனே. (எக்)

கந்தன்கடம்பன்கு கன்யெனவேபண்டு
காதலுடன்றொழு தோர்கள்பலவுண்டு
இந்தப்பெயர்கொண்டு மேனேயெனைக்கண்டு
இப்படி நிற்பது சுகமா
செப்புவு னக்கிது தகுமா. (எக்)

விந்தையோடுன்பதம் வேண்டினேனேதேடி
வித்தகஷண்முக தாசனுனைப்பாடி
சுந்தரகெம்பீரா எந்தனைநோடி
தூயனே வந்தரு ளிதுததி
நேயனே செந்தூ ரதிபதி. (எக்)

தட்டோவாணி யிவள்ஜாதி என்ற வர்ணமெட்டில்

வேறு சந்தம்.

இராகம் - செஞ்சுருட்டி, தாளம் - ஆதி.

பல்லவி.

பழநியில்வாழ்முரு கேசா திருப்
பதமதைத்தருமீசா ப்ரகாசா.

அநுபல்லவி.

அழகுமயூரமதி லமர்ந்திடும்வாசா
அஞ்செவிதனிற்குழை யணிதருந்தேசா
அலைதரும்வினைநாசா மந்தகாசா. (பழ)

சரணங்கள்.

அரன்மகனேயுனை நாடி யான்
அலைந்தேன்றினமோடி மிகவாடி
அருமஞ்சளணியரி வையரொடுகூடி
அழுந்திடாதிருக்கவுந் தனமதுகோடி
அருட்பதம்பலபாடி வந்தேன்தேடி. (பழ)

குறமகள்வள்ளியைநீ கண்டு அடி
கோமளமேளனவிண்டு தினையுண்டு
கொஞ்சியேநின்றுய் வஞ்சியைக்கோரிக்
கொண்டனையவளைக் கூட்டிமுன்னேறிற்
குமரனேமயிலேறி மணந்தேறி. (பழ)

விரைவுடனேயினி வாராய் வடி
வேலவனேயருள்தாராய் என்முன்நேராய்
வேண்டுஞ்சண்முகனே யாண்டிடுங்கோனே
விஞ்சைதனையெனக்கு விளம்பும்பூமானே
விரிமலரருந்தேனே சீமானே. (பழ)

ஆசிரிய விருத்தம்.

ஆதார மிலையென்றன் பாதார விந்தமதை
யான்பணிந் திட்டேனையா
அருள்தனைய ளித்துயென் னிருள்தனை யகற்றிவைத்
தாதரித் தாளு மையா
சூதாக வேசுரன் மாரைப்பி ளந்திட்ட
துலங்குமீ ராறு கையா
சூலபா ணியனெற்றி விழியிலறு பொறியெனுஞ்
சோதியாய் வந்த துய்யா
நாதாந்த சரவணப் பொய்கைகனற் சேர்ந்துநன்
நடனமிடு குமர மெய்யா
நானிலம் புகழ்வள்ளி தெய்வானை யொடுகூடி
நாடாளுஞ் சுப்ரமண்யா
வேதாந்த புள்ளிமயி லேறியென் முன்வந்து
வேண்டுவரம் நல்குமையா
விடுவேனோ கூற்றுகைப் படுவேனோ மாய்கையிற்
கெடுவேனோ கதிரைவேலே.

ஷாதுமான் என்றவர்ணமேட்டில்

வேறு சந்தந்தம்

இராகம் - இந்துஸ்தான் தோடி, தாளம் - ரூபகம்.

பல்லவி.

சிலனேயுனை யன்றிதுணை யாரையா புகழ்
தேசுமாமயி லீசனேமுருகேசனேவிசு வாசனே வாரும் (சீ)

அநுபல்லவி.

பாலனுனைப்பணிந்து பாடினேனேபுகழ்ந்து
பாதிமாமதி நாதனரிரு காதிலேயுப தேசமேபுரி (சீ)

சேவற்கொடிதுலங்க செந்திநகரந்தங்குஞ்
சீமானேதேவர்கோமானேகுணப் பூமானேகவிப்பாமாலைசூடுஞ் (சீ)

ஆவல்மிகுந்து தின மாதரிப்பாய்நீதானே
ஆடுவேன்புகழ் தேடுவேன் துதி பாடுவேன் தினம்நாடுவேன்குக (ஓ)

இருமூன்றிடங்கடந்த யேகாந்தமானகந்த
ஏகனேமாவை போகனேமறை யூகனேவளிபாகனேமண (ஓ)

குருபரனாகவந்தாய் குறுமுனிக்கேயுகந்தாய்
கோரி நீமனந்தேறி ஷண்முக னேரினில்வருவீரிதுதறி. (ஓ)

பஹாரியாலா என்றமெட்டில்

வேறுசந்தம்.

இராகம் - இந்துஸ்தயன் தோடி, தாளம் - ஆதி.

பல்லவி.

ஓய்யாரதீரா உக்ர மாமயில்வீரா.

அநுபல்லவி.

ஐயாவையாபுரி தனில் மர்ந்திடுஞ்சிங்காரா
அனுதின முனதருள் தருகவேநேராய்
அடியேன்றனைப் பாராய்
அத்தனே யுத்தமி சத்தியளித்திடு
கத்தனை மத்திமுகத்தவன் மகிழ் (ஓ)

வித்தாரமாக வேதனைச் சிறைதனில்வைத்தோனே
சித்தாபரமனுக்கேயுப தேசஞ்செய்கோனே
சேயனையாள்சீ மானே
சித்தமகிழ்வொடு நத்தியே நீவர
மெத்தவு முன்பதம் பத்திபுரிந்தேன் (ஓ)

அத்தியையுரித்துஅன்று மெத்தனவேபோர்த்தும்
கர்த்தனுக்கருள் புரிந்த சுத்தனே பார்த்தும்
கந்தளந்தனைத் தேற்றும்
காவாயெனதுமுன் வாவா மலரடி
தாவா ஷண்முகநற் றேவாபழநி. (ஓ)

இராகம் - தோடி. தாளம - ரூபகம்.

பல்லவி.

குருவே சரவணமுருக குமரையா
கோரினே னையா (கு)

அநுபல்லவி.

கருணைபுரிந்தென்னைக் காத்தருளுமெய்யா
காவடியைத் தாங்குமீராறுங்கையா
வருவினையகற்றும் வையாபுரிவேலய்யா
வள்ளிதெய்வானையுடன் புள்ளிமயிலேறுந்துய்யா (கு)

சரணம்.

கங்கைமுடிசடையும் துங்கமழுப்படையும்
பொங்கரவக்குடையும் தங்கமதியுடையோன்
புகழ்ந்து சிரித்தோன்
புரம தெரித்தோன்
வரைமான் தரித்தோன்
கரியை யுரித்தோன்
போற்றுமறு முகனே துதி
சாற்றுஞ்சண் முகனே நதி
பார்த்திடுங் குகனே.
பொங்கும்பர சங்கலோலா
மங்கைபார் வதிபாலா
எங்கும்பு கழுஞ்சீலா
செங்கைவே லனுகூலா
சித்திரப்பத முத்தியைத்தர
கத்தநீவா எத்தனித்தருள் (கு)

இராகம் - முகாரி தாளம் - ஆதி.

பல்லவி.

சிரகிரிதனைநிகரும் பழநிமலை
தேசிகா வுனக் கபயம் (சி)
அரகரமுருகோனே யாருந்துணைகாணேனே
பரகதிதாவேலனே பரமதயாளனே (சி)

கானகத்திலேவள்ளி தேன்தினைக்காகப்புள்ளி
மானைத்துறத்தும்வன வேடுவனைப்போலவந்த (சி)
பாலஷண்முகனுனைப் பார்தனிலேபுகழ்ந்து
பாடிமனம்வாடியுனை நாடியெங்குந்தேடினேனே. (சி)

ஐயா பழனிமலைவேலா என்றமெட்டு.

இராகம் — தாளம்.

கண்ணிகள்.

வள்ளி மகிழுமண வாளா என்மேல்
வாதுகளென்னெடு நாளா ஆளாய்
புள்ளிமயிலேறுந்த யாளா உனைப்
போற்றினேனென்குறை கேளாய். (வ)

ஐயோயிதென்னமிடி வாது அர
காவடிவேல்முடி. யாது ஓது
தீயவினையோதெரி யாது
சிறியேனைவந்தாளுமிப் போது (வ)

அன்னை தந்தையரென்ற நாட்டம் அதி
னல்வருமிக வாட்டம் நிண்டாட்டம்
பின்னே தமனனூ ர வோட்டம்
பிடித்திடுவார் நாய்நரிக் கூட்டம் (வ)

பாசவலையதினுல் யானே திருப்
பதிமுருகாவுனைத் தானே தேனே
தாசன்ஷண்முகன்றுதித் தேனே
க்ஷணமதில் வருவாயெங் கோனே (வ)

ஆறுமுகனே யேனையாளா என்ற வர்ணமெட்டு.

இராகம் - செஞ்சுருட்டி தாளம் - ரூபகம்

கண்ணிகள்.

நாதனே திருப் பரங்கிரிவாசா
நாளும்ப்ரகாசா நலியவந்திடுங் கொடுவினைநாசா இந்த

நானிலத்திலுன் றேனடிதொழ
வானிடத்தமர் கோனவர்க்குமே
நாடுநேத்திர மாயிருந்தவனே இருந்துந்தேனே
நானுனைத்தொழ நாடிவந்தேனே. (நா)

வேதமாமறை தேடிடும்வேலா
விளங்குஞ்சீலா வேறிலைகதிநீயன்றிமேலா-கொடும்
வினையதையற வனுதினமுறு
முனதிருபத மெனது சென்னியில்
வேண்டியே பொருத்திநீயாளா விரிகுணாளா
வேதனைச்சிறை வைத்தவகேளா. (நா)

ஆண்டலைக்கொ டியுடையோனே
ஆண்டிடுங்கோனேஆண் டருளுனைவேண்டிவந்தேனே-அதிக
ஆவலுற்றிட நாவினிற்றுதி
யேமிகுத்தக மாவியைத்தினம்
ஆதியேவளித்திடுவேனே அனுதினமும்நானே
ஆனந்தக்கட லேகுளிப்பேனே. (நா)

பாண்டவர்நே சன்மருகோனே
பரையின்மகனே பாவநாசனேமுருகோனே-தகி
பசிமிகுத்தழு சிசுவினைத்தாயா
ருடனெடுத்தும டியிலிருத்திய
பால்கொடுப்ப தன்றிருப்பாளா
பாதகம் நாளா பார்த்துடன்மனஞ்சகிப்பாளா (நா)

இருளறுத்திட வருமுருகையா
ஈராறுகையா எனதுமனதிலே யொளிர்மெய்யா-கெட்ட
இகலெனுமொரு பகையினமது
அகலவுனது சுககருணையை
எளியனுக்கருள் செய்திடவாராய்
இதையன்றி சீராய் ஏதுமுதவியில்லையே பாராய் (நா)

விரிமலர்ப்பத மேதொழுநேசன்
வித்தகவாசன் விளங்கிடுகுணஷண்முகதாசன்-மிக்க
விரைவுடனென துரைசெவிகொடு
அரைநொடிதனி லிறைமகனேஎன்
வேதனையகற்றிடுவாயே வேலாவுஞ்சேயே
வேகமாய்மயி லேறிடாய்நீயே. (நா)

கலிலோல என்ற வர்ணமெட்டு

இராகம் - மத்தியமாவதி, தாளம் - ஆதி.

பல்லவி.

வடிவேலுன திருபதம்பணிந்திடும்
வகையருள் புரிகிறவேள்-வளருங்கதிர்

அநுபல்லவி.

கொடியேன்படுந் துயரதையகற்றிடுங்
குருபரசரவணனே குமரகுக. (வடி)

சரணம்.

அடியேன் வினைநீக்கி உன
தன்பா லெனைநோக்கி
மிடியென் பதைப்போக்கி கலி
மெலிந்தோ டவேதாக்கி
படிமீதினில் பாலஷண்
முகங்கவிக் கிரங்கிவோய்-சேவற்கொடி.(வடி)

வாருமயிலின்மீது என்ற வர்ணமெட்டில்

வேறு சந்தம்.

பல்லவி.

வாரும்பழநிமெய்யா-வரந்தாரும்பன்னிருகையா
வஞ்சநெஞ்சத் தாலேவாடி
சஞ்சலம டைந்தேனேடி.

அநுபல்லவி.

வருமடியவர் துயரகற்றிட
திருநடனமே புரிந்தருள்தர
வந்திடிங்கு சிசந்திலங்கு
கந்தாவுந்தன் மைந்தன்நொந்தேன் (வா)

சரணங்கள்.

மாறியசூரனை நேரிற்கொன்று-யுடன்
பாரில்வண்ண மயில்மீதுநின்றாய்

பரகதிகொடு வேல்முருகா
திருமகிழ்புய மால்மருகா
திரிபுரந்தனை யரைநொடிதனி
லெறிசிவன்மகிழ் பரைபுகழ்குக
செங்கயல்நேர் தங்குவிழி
மங்கைவள்ளி இங்கிதனே. (வா)
ஏனோதாமதஞ் செய்வதுநீதி
தானோமனமிரங் குவாய்ததி (வா)

சத்திவடி வேலவனே
நத்திளனை யாள்பவனே
சரவணையதனிலே யுதித்தாய்
சதுர்மறைமுடிவினில் நடித்தாய்
திறமுடனறுமுக மெடுத்தாய்
சிறைதனிற்பிரமனை யடைத்தாய்
சித்திரவேற் சித்திரனே
நத்தினேனுன் மெத்தவுமே. (வா)
கும்பமுனிக்கருள் செய்தவனே-தினம்
நம்பினேன்ஷண்முக தாசனுனை
கோரிடும் வரமதைத் தானே
நேரிலருள் முரு கோனே
கொடுமட சமணர்களுயிரதை
விடுபடகழுவினிற் பெருவதை
யொடுபடவுடலதைச் சிதையென
வடுபடவுறு வடிவேலனே. (வா)

பாலபிஹாடு என்ற வர்ணமெட்டு.

இராகம் - பியாக், தாளம் - ஆதி.

பல்லவி.

திருகுருகிரி வர்சா-சிறுவன்குறை
தீர்த்திடுமுரு கேசா-மயேசா

அநுபல்லவி.

கரமளித்தாள் வேலா-கைக்லமலை
நாதனுக்கருள் பாலா-செவ்வேளா. (திரு)

மகுடம்.

வாவடிவேலடிதா மறைமாமுடி
தேவடியாளெனுங் காவடிதோனே
வாராய் வினை தீராய்

தொகையறு.

சந்தாவந்தேநொந்தே னெந்தாய்வந்தாள்
வந்துமிங்கே எந்தன்பங்கை
தந்துடிங்கே முந்துதங்கே
மருளென்று மிடிகரை வாதையினிற்பட்டு
மயங்குறேன் மால்மருகோனே யுடற்கெட்டு
மாமறைப்புகழ் வேலவனே—கதிர்
காமவள்ளியின் மோகனனே—இனி
தாமதமேன் ஷண்முகனையாள். (திரு)

ஆசிரிய விருத்தம்.

முன்னாளி லனதுமா மன்னுயர் மனைதனில்
மோர் வெண்ணை யுண்ண விலையோ
மோகமாய் கோபிகா ஸ்திரீகளைக் கட்டியே
மோதிப் பிடிக்க விலையோ
பிரியமுடனேதெருவி லாடியே மண்ணுண்டு
பிறவியருள் காட்ட விலையோ
அன்னாளி லாயர்மனை யுரலிலே கட்டிதயிர்
மத்தா லடிக்க விலையோ
ஐவர்க்கு மேதூது மெய்யாக வேசென்று
ஆதரித் திடவு மிலையோ
வன்ன திரு வாணையி னுயிர்காக்க வில்லையோ
வந்தாள மனமு மிலையோ
வகுப்பெலா மிப்படியி ருக்குதென் வளநுவினை
வாட்டியருள் கதிரை வேலே.

இராகம் - தோடி, தாளம் - ரூபகம்.

பல்லவி.

எழிற்பரங்கிரிக்குமரா வாவையா
இனிநீஎனையாள் முருகையா

அநுபல்லவி.

குழவியுந்தனைக் கோரியேனின்றேனே
கோரவினைகளையே யகற்றுங்கோனே
அழகுமயிலில மர்ந்திடுஞ்சீமானே
அறுமுகமாகிய சீலனே
விரைவுடன் வந்தருள்வேலனே. (எழி)

நான்முகனைமுன் குட்டிச் சிறையில் வைத்தாய் மோன
நாதனே நீதனே எந்தாய்
மான்மகளெனு மாவள்ளிக்காய்வனம்
மாறிச்சென்றீர்காதல் கொண்டுமவள்முனங்
தேனுந்தினைமாவைத் தின்றாயேயங்ஙனம்
தேனுறு கானனே வானவ
ரானவ ரீனமொ ழித்தருள் (எழி)

சிறியேன்றின மகிழ்ந்துகொண் டாடினனே-மனத்
தெளிவுடை யோர்தொழு நேசனே
மறிமழுக்கர மேந்துவோன் சேயே
மாநிலமெங்கினுங் காத்திட வந்தாயே
அறிவிலேனுக்குன் னருளை பரிப்பாயே
அதி பதி யென வரு முரு கனே
விது முக குக வரி மருகனே. (எழி)

கிரௌஞ்சகிரியை வேல்விட்டுப் பிளந்தெறிந்தாய்
கிழிபட்டிட சூரனைத் துண்டாய்
பரம்பொருளாய் விளங்கிடுஞ் செந்தேனே
பத்தன்வித்தகஷண் முகன்றுதித் தேனே
சரங்கொடுமலர் தூவியே நின்றேனே
கதிதாவிது தருவாய்
மதிதனைக்கொடுத் திடவிரைவாய். (எழி)

இப்படிப் புலம்புவதுமேன் என்ற வர்ணமெடில்

வேறு சந்தம்.

இராகம் - மத்தியமாவதி, தாளம் - ஆதி

பல்லவி.

வேலா கோலாகல மயில்வீரா மிக
விந்தையதா தத்துதித்தேன்
சுந்தரவள் ளிசிங்காரா. (வே)

அநுபல்லவி.

ஆலமுண்டநீலகண்ட சூலனேமணம்புரிந்த
வாலேமக ஞானகந்த
வரந்தா சிறந்தே நிறைந்த
மணங் கமழ். (வே)

சூரபத்மனே மின்னுங்கூறுடைச் செவ்வேலால் முன்னந்
தாருடன்கி ழித்த வன்னச்
சல்லாபச் சொல்லாநற்
புல்லாமனங் கல்லா. (வே)

நச்சுபுரியுஞ்சமண ரிச்சைமதத்தை யொழித்த
செச்சையணி மால் களித்த
செந்தமிட் சண்முகா
வந்தருளே குகா. (வே)

கழுகுமலைக் கிணைவேறு என்ற வர்ணமெட்டு.

இராகம் - பைரவி, தாளம் - ரூபகம்.

பல்லவி.

பழநிமலைக்கிணை நேரா
பக்தர்கள் காவடியேவருஞ் சீருய்

அநுபல்லவி.

பழக்கமுறவேமனதினை கலக்கமறவேயருள்புரி. (வே)

சரணங்கள்.

கார்த்திகைப்பெண்கள் வெண்சாமரைபோட
கானக்குறவள்ளி தெய்வானையுங்கூட
சேர்த்தியாயடியவர் வாழ்த்திக்கொண்டாட
நித்தியமுந்தேவர் சங்கீதங்கள்பாட
நிதமுஞ்ச ணதிதனிலனுதின
மிதமுறு நடமிடுமுருகனன்
நேசன் மலை
வாசன் மந்த
காசன் திரை
ஈசன் முரு
கேசன் விசு
வாசன் புகழ்
பாலன் ஷண்முகன் பணிந்தேதொழுதிடும் (ப)

பழனியாண்டவா என்னைப்பாராதிருக்கலாமா என்றவர்ணமெட்டு)

இராகம் - செஞ்சுருட்டி, தாளம் - ஆதி.

பல்லவி.

பாலவேலனே யுந்தன் பாலனைக் கார்த்தருள் சிவ (பா

அநுபல்லவி.

காலனையே முன்னொரு காலத்தினிற்காலாலே
ஞாலமதிலுதைத்த ஆலமுண்டவன்மகிழும் (பா)
அல்லலகற்றகருங் கல்லைப்பெண்ணாகச் செய்த
வல்லராமன்றனக்கு வாய்த்த தங்கையினருமைப் (பா)
கானகந்தன்னிற்குற மானவளே நடுங்க
யானையதாகச்சென்ற வனருமைச்சோதரசிவ (பா)
தாசன்ஷண்முகனுனே நேசமதாய்துதித்தேன்
ஆசையுடனேமயின் வாசிதனிலேறிவரும் (பா)

இன்னும் வரமேனையாளென்ற வர்ணமெட்டு.

இராகம் - இந்துஸ்தான் ப்யாக் தாளம் - ஆதி.

பல்லவி.

வன்னமயில்	வேலையா		
வாரும்பன்னிரு	கையா	இங்கு	(வ)

அநுபல்லவி.

அன்னை வள்ளிமணவாளா	ஆறுமாமுகமெய்யா	(வ)

சரணம்.

தெய்வகுஞ்சரி	லோலா		
தேவர்புகழ்	மேலா	சீலா	(வ)
ஐவர்க்கருள்புரிந்த	அரியின் மருமகனே		(வ)
அத்திமுகன்சோத	ரனே		
ஆண்டருளவேண்டி	னேனே		(வ)
உத்தமிபரைக்கமைந்த	வித்தகமைந்தனே நதி		(வ)
காலனைனுகி	டாமற்		
கார்த்திடுந்தண்டா	யுதனே		(வ)
பாலன்ஷண்முகனுன்னை	பணியுந்தயாநிதி		(வ)

தெற்குமுகமயிருக்கும் என்ற வர்ணமெட்டு

இராகம் - செஞ்சுருட்டி தாளம் - ஆதி.

கண்ணிகள்.

ஆறுமுகமாயிருக்குஞ்	சீரதைப்	பாரு	இரு
பாரியரமைந்திருக்கும்	நேரதைப்	பாரு	(ஆ)
மாறிவந்தசூரனைமுன்	கொன்றதைப்	பாரு	புள்ளி
மாமயின்மீதேறியுடன்	நின்றதைப்	பாரு	(ஆ)
மாங்கனிதனக்கு வலம்	வந்ததைப்	பாரு	வள்ளி
மாங்கனிதனை மணம்	புரிந்ததைப்	பாரு	(ஆ)
பாலஷண்முகன் பகர்ந்த	மைந்தமிழ்	பாரு	மனப்
பக்திகொண்டு வேலனைச்	சிந்திதித்துநீ	தேரு	(ஆ)

இராகம் - இந்துஸ்தான் தோடி, தாளம் - ஆதி.

பல்லவி.

திருக்கழுகாசலம்வளர் மணியே
சிவஞானிகள்வாழ்ந்து சிந் தாமணியே (தி)

அநுபல்லவி.

குருபரனென வந்தெழுந்தருள்வேலா
குவலயமதில்நடம் புரிந்திடுஞ் சீலா
இருளறுதினகர னெனவருமேலா
ஈசனே நேசனே வாசனே
தாசனைக் காத்திடுங் கோனே (தி)

நிருமலன்மனமதில் நிறைந்திடும் நீதா
நிதஞ்சமர் வினைகொடுஞ் சூரரின் வாதா
நறுமலருறுகடம் பணிந்திடும்நாதா
நான்மறைமுடிவினின் றுடியபாதா
கருமவினையகலக் காத்தருள்தாதா
கந்தனே செந்தேனே நானே
உந்தனைப் பணிந்திட்டேனே (தி)

ஆலம்பெருத்தயெம ஆதரைவாட்டும்
சுகமனுதினம்பெற சூக்ஷமத்தைக்காட்டும்
மாலும்பிறவியினில் மயங்கினேன்மெய்யா
மதிதனையளித்திட வருமுருகையா
காலமெலாமுனைக் கருதினேனையா
கத்தனே சித்தனே கோனே
சுத்தனே சிங்கார வேலனே. (தி)

ஞாலமதனில்மாயா பாசமேமூடி
நலிந்துவருந்துகின்றே னுனைப்பாடி
கோலமயிலின்மீ தேறியேவாவா
குறுமுனிதனக்கரு ளளித்திடுந்தேவா
பாலன்ஷண்முகன்றமிழ் பகர்ந்தேன்காவா
பாலனே வேலனே லோலனே
காலனைக் கொன்றோன் சேயனே. (தி)

பாராமுகமேனையா என்ற வர்ணமெட்டு.

இராகம் - ஆனந்தபைரவி, தாளம் — ஆதி.

பல்லவி.

வேலாமுகம் பாரையா வேண்டினேன்வடி-
வேலாமுகம் பாரையா.

அநுபல்லவி.

சீலாபரையக்தரி பாலஃவெளியற்கனு
கூலாமறைமுடிவின் மேலாவிளங்கும்நல
தீரா வருவினைசங்
காரா சூரனைமுனம்
நேரா வதைத்தகிட
வீரா பரங்கிரிவாழ் (வே)

பாதந்தனையருள்வி னோதம்பெருகவிந்து
நாதங்கடந்தபர ஞோதம்பிரங்கொளியே
பாரம் ஜனனசமூ
சாரம் ஐவர்கள்செயுங்
கோரம் மாயாவுடல்வி
காரம் தனையொழித்து. (வே)

சோயிடையிலொளி ரோலைசெவிதுலங்க
லீலைசெய்பரத்தைய ரீளைமாயையிற்சிக்கி
தேவா உனைமறந்தேன்
காவா வரமதனைத்
தாவா மயூரமேறி
வாவா வந்தருள்புரி (வே)

அண்டமெங்குமதிரக் கண்டோர்திகைக்கக்குன்றைச்
செண்டாலடித்துநின்ற தண்டாயுதபாணியுன்
னேசன் பணிந்துதொழும்
பாசன் பாண்டிநகரில்
வாசன் ஷண்முகக்கவி
தாசன் றமிட்கருள (வே)

இராகம் - ஆனந்த பைரவி தாளம் - ரூபகம்.

கண்ணிகள்.

பண்டாரவேடங்கொண்டு பாரிலலைந்ததேனோ
பழநிமலைவாழ் கந்தையா
அண்டர்முனிவர்தொழ எண்டிசையும்புகழ
வண்டுமொய்த்திடுங்கூந்தல் வள்ளிமகிழ்ந்திடவோ
யிவ்வேடங்கொண்டீரையா (ப)

மொட்டையுடன் லங்கோடு முடிந்துகாயாஷத்தோடு
முழுநீர்பூசிய தேனையா
திட்டமுடனேசிறு வட்டவோடுமற்றொரு
கெட்டிவேலைப்பிடித்தாய் க்ருபைசெய்திடத்தானோ
யிவ்வேடங்கொண்டீரையா (ப)

சாதிலொருளிருந்தக் கவசகுண்டலமாட
கையில்ருத்ராக்ஷ மேனையா
நீதிவிளங்கிடயிம் மேதினிதனிலெக்கும்
ஆதிபரம்பொருளா யறையிற்கோவணங்கட்டி
யிவ்வேடங்கொண்டீரையா (ப)

அண்ணனுக்குமுனக்கு மாகாமலேவெறுத்து
ஆண்டியானீரோ முருகையா
வண்ணமாங்கனிக்கன்று எண்ணங்கொண்டுநீசென்று
உண்ணுமற்போனேமென்று ஓய்ந்தோயிப்புவிதனில
யிவ்வேடங்கொண்டீரையா (ப)

மாதாநீலிகபாலி யேதாகிலுஞ்சொன்னாளோ
மாறிவந்ததைக் கூறய்யா
வாதாபிதாவினோடு நீதாவுரையென்னோடு
ஆதாரமாகயேழை வேதனையைத்தீர்க்கவோ
யிவ்வேடங் கொண்டீரையா (பண்)

அச்சமில்லாமற்றெருப் பிச்சைவாங்கியுண்டிட
ஆசைவைத்ததேன் சொல்லையா

இச்சையடியார்தன்னை ரக்ஷித்திடவோபின்னை
பச்சைமயிலொன்றையும் பக்கமதிலேவைத்து
யிவ்வேடங் கொண்டீரையா. (பண்)

பாலன்ஷண்முகனேவந் தாளவெகுதூலேயோ
பரதேசியான வேலய்யா
ஞாலமதிலுந்தனை நாளுந்துதித்தேனுனே
காலன்வந்தணுகாது காத்திடவேயுகந்து
யிவ்வேடங் கொண்டீரையா. (பண்)

ஆசிரிய விருத்தம்.

வேலவா நீயுமுன் பாலக்கு றத்திக்கு
வேடனாய்ப் போக விலையோ
வீரமுள வேடுவர்க ளைக்கண்டு மேபெரும்
வேங்கைமர மாக விலையோ
சீலமுள விலைமாதர் தன்னிடஞ் சேரநின்
செபமாலை யிழக்க விலையோ
சிங்கார மாய்சித்ர வன்னமயி லேறியுன்
சிந்தையு நடுங்க விலையோ
ஆலகா லவிடமுண் டசிவனுக் கேயருள்
அன்புமக னாக விலையோ
அலறிடவு மேசமணர் குலமதனை யேகழுவி
லாட்டிவைத் திடவு மிலையோ
ஞாலமதி லுனதுதுதி செய்யுமடி யார்கட்கு
நற்காக்ஷி தருவ திலையோ
நடனமயில் வாசிதனி லேறியென் முன்வரும்
நவரத்னக் கதிரை வேலே.

மாமயிலேலேனமருவ என்ற வர்ணமெட்டு.

இராகம் - இந்துஸ்தான் தோடி - தாளம் - ஆதி.

கண்ணிகள்.

ஈசனுக்கருள்புரிகு கேசா வாசா யிந்த
மோசமே னென்னையாள் முருகேசா ஈசா (ஜெகதீ)

ஆசைவலையாலே வாடினேனே ஞானே என்றன்
பாசவினையை யகற்றுந்தேனே கோனே (முன்னமீச)

வேதனைச்சிறை தவிர்த்த வீரா தீரா மலர்ப்
பாதமே எனக்கு நல்க வாராய் நேராய் தமிழ்
வித்தக முத்துக்குமார வேலா மூலா திட
சித்தனே யெல்லோர்க்கு மனு கூலா மேலா (ஜெகதீச)

ஞாலமதிலே யீராறு கையா மெய்யா கொடுங்
காலனணு காவரந்தா வையா துய்யா வன்னக்
கோலமயின்மீதுவருங் கோலா கலா சிறு
பாலன் ஷண்முகனையாள் சுசீலா வமேலா (பறையீச)

கந்தநாதா என்றவர்ணமெட்டு

இராகம் - பைரவி தாளம் - ரூபகம்.

பல்லவி.

கானமயில் வேலவாசுண் பாரையா
கதிதர விதுததி யாரையா (கா(

அநுபல்லவி.

வானோர்கள்பணி யுமுருகையா
வள்ளிதெய்வானை யணையுமீராறுகையா (கா)

சரணங்கள்.

வடிவுறுவுனதடி படியடியவரிட
மிடாதுடரா திடமுடனடைவொடு
சடவினைகெடுபட நடமிடுமமரா
வடுபடவசுரரின் முடியுடைபடகுலங்
கெட வடடிகுமாரா

சீக்கிரம்வந் தாளவு மனமிலையா
நோக்கியெனைப் பார்க்கவும் பெருமலையா (கா)

வந்துனைநொந் திடத்தானே
செந்திமலமர்ந் திடுங்கோனே
பந்தம் கற்றிடுவோனே
செந்தமிழ்ச் சண்முகன்யரனே
சேவற்கொடிதனைக் கரந்தாங்கும் பதி
ஆவலுடனே வருவாய் குண நிதி (கா

வண்ணச்சந்த வர்னமேட்டு.

இராகம் - கோஷ் தாளம் - ஆதி.

கண்ணிகள்.

அதிபதிதிதிஜன காதிதுதிமதி
கதிதரவுறுங்கழு காசலப்பதி
சதிபுரிகுருயிதி லெதுகுறைநிதமிதை
யிதமொடு வெனக்கிதை யோதுங்குணபதி
சந்ததமு முந்தனைநி
னைந்துயெந்தன் சிந்தைகொள்ள
க்ஷணத்திலேனன் மணத்துடனே
வனக்குறமின் றனைப்புணரும் (அ)
ரதகஜதுரகப தாதியுடன்வரு
ராவணனைப்பொடி யாயடித்தொரு
மதகரிமடுவதில் முராஹரியெனமுறை
யிடவாந்தரவரு மாதவன்திரு
மாரன்வடிவே யுகந்த
சீருமையே மிகுந்த
மருமகனேயுன திருபதமேயெனக்
கருளறுமுகவ சரவணபவனே (அ
அவுணர்கள்படைதனை யறைநொடிதனிற்பொடி
படவுயிர்மடிந்திட வேகெசடுத்தாய்

நவிலுமமமதைகொளுஞ் சமணரைக்கழுவதில்
நலமதுபெறவுடன் போடுவித்தாய்
நல்லமயிலேறி வரும்
வல்லபாவுந்தனைக் கோரும்
நண்பண் ஷண்முகன் பைந்தமிட்கருள்
விண்புகழ்ந்திடும் வண்மையைப்பெறு (அ)

வாகாவா வென்றாலும் என்ற வர்னமெட்டு.

இராகம் - இந்துஸ்தான் பியாக் தாளம் - ரூபகம்.

கண்ணிகள்.

உத்தமவேலாவுன் பெற்ற தகப்பனோர்
சத்தியைத் தான் மறைய
எத்தினமும்முடி மீதினிலேந்தி
யிருந்திடவு முறையோ குறையோ (உ)

அத்தியுரித்துஅத் தோல்புனைந்துசடை
யாடிட யுங்களையா
எத்தனித்தேபத்தர் சித்தமகிழ்ந்திட
ஏன்பித்தங் கொண்டாரய்யா ஓமெய்யா (உ)

வனமதிலேபத்மா சூரன்விரட்டிட
வாடியொ ழியலாமா
கனகசபைதனில் வெட்கமிலாதுமுன்
கால்தூக்கி யாடலாமா ஏழுமா (உ)

பிறகுமொருதரம் விறகுசுமைதூக்கிப்
பேர்விலை கூறலுண்டோ
இரவுபகலுங்கண் ணப்பன்றந்தயெச்ச
லினிமையான சுற்கண்டோ அதுபண்டோ (உ)

பிட்டுக்குமண்சுமந் தேபாண்டியன்கைப்
பிரம்படி பட்டதேனோ
திட்டமுடன்சிறுத் தொண்டனமைந்தன
சீராளன்கறி யுண்டதேனோ சரிதானோ (உ)

இப்படியேயடி யார்களுக்குவர
மீய்ந்திடவு மில்லையா
செப்பிடுஞ்செந்தமிழ் சண்முகனையாள
தேவாம னம்வல்லையா சொல்லையா (உ)

கண்டேன் ராவணனை என்றவர்ணமெட்டு.

இராகம் - இந்துஸதான் தோடி தாளம் ரூபகம்.

பல்லவி.

இன்னுந்தாமதமா இறைவா (இ)

அநுபல்லவி.

இங்குமங்கு மெங்கிலாது
எங்களும்பி றைந்தவேலா (இ)

சரணங்கள்.

வன்னமயின்மீது யுன்னதமா யேறி
வந்தவனேவலம் மாங்கனியைக்கோரி
உன்னையலாதுவே றில்லைகதி பாரி
னுனதடி தொழுமடி
யவரிட மனதொடுவர
விதுவே திடம் (இ)

அன்னைவள்ளிமகி ழுந்தினைக்கோடியே
அன்புடன்புள்ளி மானதனைத்தேடியே
பின்னவளிடமே பெறுவாதயோடி
பெருவன வேடுவர்வந்திட
திறமுட னொளிந்திடுஞ்
சுந்தரா (இ)

ஆடியதில்லைச் சிதம்பரத்தோன்மைந்தா
ஆண்டருள்வாய்திருச் செந்தூரில் வாழ்கந்தா
தேடியுன்பாதஞ் சிறுவனுமே னொந்தற்
திருவருள் தருவதுமில்லையோ
வருவது முனக்கொருமலையோ (இ)

பாண்டிநகர்தனில் வாழ்ந்திடுமுல்லாசன்
பாலன்சந்தச்சர பஷண்முகதாசன்
வேண்டியுனைத்துதித் தாடியநன்னேசன்
வித்தகமுருகனே யிதுததி
சித்தம்வைத்தாண் டிடுங்குணநிதி (இ)

ஜாவோரே சாவரியாம் என்றவர்ணமெட்டு.

இராகம் - பியாக் - தாளம் - ஆதி.

பல்லவி.

வான் பாலா விதுதுதி வரவெனதிடமிந்த
வாதேதனோ வஞ்சகச்
சூட்தனோ நெஞ்சம்வா
ராதேதனோ என்சொற்கே
ளாதேதனோ (வா)

அநுபல்லவி.

வேலவனே வுனைத்துதிப் தேன்பவநாசா
வேதனைச் சிறையினி விடுமுருகேசா
சீலனேகுறவள்ளி மகிழ்விசுவாசா
தேவர்கள் தொழுந்தென் பழனியில்வாசா (வா)

அலறிக்கூவியழு தேன்றிரு மெய்யா
அன்புடன்வந்திடு வாவீராறுகையா
உளறியே வேண்டினே னுண்மையீதய்யா
உத்தமனேமுத்தி வகையருளய்யா (வா)

ஆதரித்தாளெனை யரிமருமகனே
அவுணர்கள்படைதனை யழித்திடுங்குகனே
பாதமதைத்தரவரு மறுமுகனே
பரமனுக்கருள்புரி பிரணவச்சுகனே (வா)

அடியேனைக் கிருபை கூர்ந்தாள வொணுதா
அருமறைமுறையிடுங் குருபர போதா
வடிவழகுறுமயின் மேல்வரு நாதா
வளர்தமிழ் ஷண்முகன்றுதி மலர்ப்பாதா (வா)

தீரப்ரதாப ஜேயராவணன் என்ற வர்ணமெட்டு.

இராகம் - பியாக் - தாளம் - ஆதி.

வேலாசு சீலா வெகு வல்லவா முன்
வேதனைச்சிறைசெய்தா யல்லவா
சூலாத்ரிசூலன்மக னல்லவா
சொற்றமிழைஎனக்கேசொல்லவா (வே)

வையகத் தையலர் மையலிலே நிதம்
வாடுகின்றேன் பைய லையலிலே
வெய்யவினைகளறுப் துன்னிலே
துய்யபத பதமருள்வா யண்ணலே (வே)

மத்தாலடியுண்டமால் தனக்கு புகழ்
வித்தாரமர்மருகா வுனக்கு
சித்தமிரங்கித் தின மெனக்கு
முத்திகொடுத்திடவேன் பிணக்கு (வே)

கோலமயின் மிசையே வருவாய் பரங்
குன்றிலமர்ந்தவனே யுருவாய்
பாலன் ஷண்முகனுக்கே குருவாய்
பாங்குடன் வந்தாய் நல்லாதரவாய். (வே)

ஆசிரிய விருத்தம்.

ஐயனே வுனதுசெந் தாமரைப்பாதமல
ராருக்கு தான்கிட்டுமோ
அல்லாது வேசையர்க ளாசையே ஜெகமீது
அதுதினமு வந்தொட்டுமோ
பொய்யனு னாகிலும் பெற்றமக னிவனென்று
பூரணம் வந்தெட்டுமோ
போராடி மாராடு மையற்கு ரங்கெனப்
புகலுஞ் சங்கை முட்டுமோ
வையகந் தனில் பணப் பேய்பிடித் தாடிடும்
வானதகை கால்கட்டுமோ
வாதாடி சூதாடி வயிர் பிழைத்திடவுமே
வந்தவிதி மொழி தட்டுமோ
செய்யாத காரியஞ் செய்தும் பிழைக்க மேற்
சியும் சலங் கொட்டுமோ
சீர்பெருகு மதுரை நகர் சிவசுந்த்ர மூர்த்தியருண்
சித்திரக் கதிரைவேலே.

பூவருந்திருவே என்றவர்ணமெட்டு.

இராகம் - செஞ்சுருட்டி - தாளம் - ஆதி.

கண்ணிகள்.

மாதவன்மருகா மயிலேறிய முருகா மனத்
தோடெனையணைத் தேயருள் கொடுத்
தேவினைதுறத் தேமதிமிகு (மா)

பாதமேதரவே பதம்பாடி னேன்வரவே பெரும்
பாவியுந்தனைக் கூவியேகரந்
தாவிநிற்குதென் னுவிநடித்து (பா)

ஈசனின்மகனே எனையாளறுமுகனே இந்த
வேளையீராறு தோளனேயெனை
யாளவருவாய் தாளவுரைத்தேன் (ஈ)

சண்முகப்பொருளே சரியோதிருவருளே இனுஞ்
சாலமேனுமை பாலனேயது
கூலனேகதிர் வேலனேயரி (மா)

மாரன்வாதையினல் என்ற வர்ணமெட்டில்.

வேறு சந்தம்.

இராகம் - பைரவி - தாளம் ரூபகம்.

பல்லவி.

கந்தாவந்திடுவாய் செந்தூர்க் (க)

அநுபல்லவி.

கா வா யெ னை யே வே லாதிருக் (க)
கன மன முன தினை யடி கொடு திட முடன் (க)
கனக மயிலி லுறவே மலையோ-நலமே புரிவ திலையோ துலையோ

சரணங்கள்.

கதிதரு மிதுததி நிதியெனு மதிபதி மதிமிகு பசுபதிக் (க)
கரமுருகா குறவள்ளி யருமைபெற சரசமொடு வரமருளும்
வொருமுறையோ (க)
கருணைகுருநீ தருணமிதுவே யருணகிரியோ டுறையுமுருவே
வரநிதமிதே குருமுனிக்கருள் (க)

தீர்த்த னென்வந்து சித்தமுவந்து யித்தினமிந்தப் பக்தனையாளக் (க)
கதிரைவரையிலுறு வறுமுககுகனே
மதிதனையளியூக வசரணபவனே
பதிலுரைபுரிவா யீராறுகரனே (க)

கஞ்சமலர்ப்பாதனே கெஞ்சினேனன்னீதனே (க)
கந்துகமெனும்மயிலேறி வந்திடுவாயினிக்கோரி
விந்தையதர்கவென்னேரி லந்தமுடனிருபாரி
சிந்தைமகிழவுந்தேரி செந்தமிழ்ச்சண்முகவாரி (க)

அடங்காது அடங்காது என்ற வர்ணமேட்டு.

இராகம் - செஞ்சுருட்டி தாளம் - ஆதி.

பல்லவி.

வடிவேலாவுமைபாலா வந்தருளுவாய் ஞான (வ)

அநுபல்லவி.

அடியேனுனைத்தொழுதே ஞூறுமுகனேவேறு
ஆதாரமேயில்லையுன் பாதாரவிந்தந்து
அண்டருள் வாயே அரவதைப்
பூண்டவன் சேயே யருள்தருந்
தாண்டவன் நீயே
அரக்கர் குலத்தை நொருக்கியடித்த
சிறக்கும்புயத்து வரிக்கு மருக (வ)

மடமாதரால் மயங்கி மைந்தன் மனந்தியங்கி
திடமிகவே குறைந்து தேவரின்னையே பணியத்
தேடிநொந் தேனே சதமென
நாடிவந் தேனே இதுதரு
பாடிவந் தேனே
திருக்குநெஞ்சகத் திருக்குமவுணப்
வருக்கமதனை பறக்கவழித்த (வ)

வடிவான பாண்டிநகர் வையகமென்னுமிந்தப்
படிமீதிலேயுனது பாலன்ஷண்முகன்றுதிக்கும்
பாவல னேவா பக்தரி
னேவல னேவா பரங்கிரிக்
காவல னேவா
பச்சைமயி லேறியென்மு
லிச்சையுட னேவருந்திரு (வ)

சேந்தாழம்பு என்றவர்ணமேட்டில்.
வேறு சந்தம்.
இராகம் - பியாக் - தாளம் ஆதி.

பல்லவி.

கந்தா வந்தே ஞெந்தே னெந்தாய்
காமுருகையா காமுருகையா கா கா திருத்தணிக்

அநுபல்லவி.

அந்தரிபாலனே ஆளுஞ்சு சீலனே
ஆதாரவேதனைமுன் மோதியவி னோதனோநற் (க)

சரணங்கள்.

சிந்தைதைநந்தே னுந்தன் மைந்தன்
சேவடிதாராய் சேவடிதாராய் சே சே திருத்தணிக்
அந்தமிருந்தவனே ஆயன் மருமகனே (க)
ஆசையுறுவள்ளி தெய்வானையோடிருப்பவனே (க)

தொந்த பந்த நிந்தை கொந்தி
தோகையால்வாடி தோகையால்வாடி தோ தோ திருத்தணிக்
அந்தமுப்புரமெறித்த ஆண்டிமகிழுவித்த (க)
மாதிபிரணவப்பொ ருள்தனையுபதேசித்த (க)

சொந்தவிந்தை தந்தி டெந்தன்
சுந்தரவேலா சுந்தரவேலா சு சு திருந்தணிக்
அந்தரத்தோனேமெய்யா ஐயாபன்னிருகையா
செந்தமிழ் ஷண்முகனே தேவனே கண்பாருந்துய்யா (க)

சாஸ்திரவழிதெரிந்த என்ற வர்னமெட்டு.
இராகம் - எதுகுல காம்போதி - தாளம் - ஆதி.

கண்ணிகள்.

சத்திமகனே குகனே ஷண்முகனே சற்குணனே
வித்தையருளும்பரனே வேலவனேகோனே (ச)

அத்திமுக னுக்கிளைய வாறுமுகனே சுகனே
சித்தமகிழ் நித்தினமே சேவற்கொடியோனே (ச)

புள்ளிமயிலேறுங்குற வள்ளிமணமோகனனே
வெள்ளிமலை மீதினிலே வீற்றிருக்குந்தேனே (ச)

தேவர்கள் புகழும்பூமி தென்மதுரைப்பாண்டிநேமி
பாவலன் ஷண்முகன்றமிட் பார்த்தருளுஞ்சாமி (ச)

வேலனேயிந்த வீணனை என்ற வர்ணமெட்டு
இராகம் - இந்துஸ்தான் - தோடி - தாளம் - ஆதி.

பல்லவி.

தேவனே திரு மான்வள்ளிமோகனனே அருள்
திறமேபெற வரமேதா
வருவாயுனை மறவேன்குற
மான்வள்ளி மோகனனே

அநுபல்லவி.

ஆவலொடு துதித்தெங் கெங்குந்தேடினேன் ஓம்
அரகராமுருகனே வரங்கமா
முராகரி மருகனே பரங்கிரி
மான்வள்ளி மோகனனே (தே)

சேவற்கொடிகரந் தாங்கிடுஞ்சீமானே
செந்திநகர்தனில் வாழ்ந்திடும் பூமானே
பாவமதனையொ ழித்திடுங் கோமானே
பரமனுக்க ருள்புரி குமரனே
பிரமனைச் சிறையிடு சமரனே
மான்வள்ளி மோகனனே (தே)

தேவியுமைக்கொரு சித்திரமைந்தனே
தேடிமிகத்துதித் தேனருங்கந்தனே
பாவியெனப்புவி மீதினில் வந்தேனே
பத்திமி குத்திடு ஷண்முக
னைத்தின மித்ததி யாள்குற
மான்வள்ளி மோகனனே (தே)

தேடிவேன் சீதை மாதாவை நானே என்றவர்ணமெட்டில்
வேறுசந்தம்.
இராகம் - இந்துஸ்தான் - தோடி தாளம் ஆதி.
பல்லவி.

வாருங் கானமயில் வீராகண் பாராய் சீராய் குரு
வானவாதுதித்தேன்வினை தீராய் நேராய் (வா)

அநுபல்லவி.

வானவர்கள் பணியுங் கோனே மலரணியுந்
தேனே தெய்வானைவள்ளி மானவர்களோடுவ ரு(வா)

சரணங்கள்.

அந்தரிக்கருமையுறு மைந்தா கந்தா நீ
யெந்தனைவந்தாளுமர விந்தா வந்தாள் (பறைபந்திரி)

ஆத்திமரத்தடியின் வீற்றிருந்தோன் மகனே
ஆதாரவேது யார்துணையோது
வாதோமண்மீது நீதயேன் சூது (கா)

செந்தியிலமர்ந்திடும் பிரக் யாதா நீதா அதி
சுந்தரமிருந்தவெந்தன் மாதா பிதா (நீயேசெந்)

சித்தமிகவுகந்து யித்தினமே மகிழ்ந்து
தேடி காணே நாடிவம்மானே
கூடிடுவோனே வாடினேனுனே (வா)

மாமதுரைப்பாண்டிநகர்ப் பூமிவாமி வளர்
மைந்தன் ஷண்முகத்தின்குண நேமி சாமி
நேமமொடுகேடபபங் தாமணிபுயத்த
நீளும்பிரகாசா நாளும் விசுவாச
கேளுங்குறையீசா ஆளுமுருகேசா (கா)

ராமபஜனே கோரியா என்றவர்னமெட்டு.

இராகம் - பியாக் - தாளம் - ஆதி.

பல்லவி.

இன்னுந் தாமத மேனையா
ஏமுரு கையா (இ)

அநுபல்லவி.

அன்னைவள்ளிமணாளா ஆளெனையே தயாளா
உன்னதப்பன்னிரு தோளா ஓஹோகுணாளா (இ)

வன்னமயின் மீதேறி வந்தருள்வாய் சவாரி
கன்னயனே யாளுங்கோரி நாயேனைப்பாரி (வி)

சித்தமிகவும் நைந்து எத்தினமும் நொந்து
கர்த்தனேவுனை நினைந்து கதறிவந்தும் (இ)

மாதவனென் தங்கு கோதண்டங்கை விளங்கு
சீதான் மருகா வெங்குர் திகழ விங்கு (இ)

பாண்டிநகரில் வாசன் பாவலர்க்கதிநேசன்
வேண்டிடுஞ் சண்முகதாசன் விளம்புந் தேக (இ)

உடமேலேமுத்துச்சாமி பாட்டை என்றமெட்டு.

வேறு சந்தம்.

இராகம் - சுருட்டு - தாளம் - ஆதி.

கண்ணிகள்.

மாமதி மிகுமதுரைக் கோட்டை நாட்டில்
மைந்தன் செந்தமிழ்ச் சண்முகன்பாட்டை யினுங்
கேட்டே மனம் நாட்டே
மகபதி மருக வுனிருபதமருள்
தரவருதிருப் ப்ரக்கிரியுறை
கந்தவேளே கண்பாரிக்கவேளே
தாமதித்திடாது வள்ளியைக் கண்டு பண்டு
தவமிகுத்த நாரதர்சொல் விண்டு மதி
கொண்டு தினை மண்டு
தனில் மானைத்தேடி கானகத்தேயோடி
மானதனைக்கூடி தேனதனையுண்ட
முத்திவடிவே மைந்தன் பக்திமுறைகேள்
அத்திமுகனுக்கிளைய வேலா மாலாய்
நத்தியே பணிந்தேன் தண்டைக்காலா வுமை
பாலா அனு கூலா
முன்ன மரக்கன்ராவணேஸ்வரன்-தரித்தமுடிபத்துங்கத்
திரிக்கக்களைகள்தொடுத் தறுத்தமுரஹரியின்
மருகாவருவாய் மயின் முருகா குருவாய்

ஆசிரிய விருத்தம்.

வயிற்றுவலி சோகைவிப் பருதிமீ ரொழுகு
மாலைவெண்குட்ட மிருமல்
வாதகுந் தம்பெருவி யாதிபக் கப்பிளவு
வண்டுகடி அண்டவாதம்
சயித்திய மகோதரம் பிரமியுஞ் சூலைகா
சங்க்ராணி பாண்டுரோகந்
தலைவலிகருங்குட்ட மிணைதொடை வாழைப்பூ
தாமரைக் கிரந்திபடுவ
முயர்பிணிப லத்து நெடுநா ளிருமுறைக்காய்ச்சல்
மூலங் கபால வாய்வு
முகஜன்னி சுகஜன்னி சூலைவலி பெரும்பாண்டு
முன்னோருரைத்த முறையே
பயித்தியமுதல் வினையெலாம் பறந்தோடவே
பறித்தெறியு மதிகாரனே
பழமறை சொலியர்சில தொழுபவர்களனுகூல
பழனிமாமலையின் வேலே.

மங்களம்.

கிஸ்கேபுராஞ்சால் என்றவர்னமெட்டு.

இராகம் - டான்ஸ் - தாளம் - ஏகம்.

பல்லவி.

ஜெயஜெய மங்களமே சிங்கார
சித்திவிநாயகர்க்குஞ் சேர்ந்த வல்லபையார்க்கு
செஞ்சேவற் கொடியோர்க்கும் (சி ஜெ)

அநுபல்லவி.

நயமிகு வேதனுக்கும் நங்கைபாரதிக்கும்
நாரணன் றனக்கும் நன்மைத்திருவுக்கும்
மயமிகு பரமனுக்கும் (சி ஜெ)

அன்னைமீனும்பிகைக்கு ஆதிதேவருக்கும்
அன்புடனே கீர்த்தன மறையுமன்னோர்க்கும்
சண்முக தாசனுக்கும் (சி ஜெ)

இன்பகௌரி சங்கற்கும் எக்குலத்தவர்க்கும்
ஏதமிலாதமோன சாதனத்தவர்க்கும்
இப்புவிப்புலவோர்க்கும் (சி ஜெ)

வாழி விருத்தம்.

சீரோங்கு மதுரைவாழி சிறியோர்களெவரும் வாழி
பேரோங்கு முறையுமெங்கள் பெம்மானின் பெயரும் வாழி
ஏரோங்கு மிந்நூல்வாழி யிதன்பொருளாய்ந்தோர் வாழி
நாரோங்கு வாழுமாக்கள் நனி வாழி வாழி மன்னோ

அவையடக்கம்.

ஆசிரிய விருத்தம்.

எத்திசையி லும்புகழு வித்தகக் கம்பரொடு
யினிக்காள மேகமல்ல
எதிரிணையி லாதபுக ழேந்தி யொட்டக்கூத்த
னெழுதுமொரு கவியுமல்ல

சித்தமகி ழும்பத காளிதா சன்றிருச்
செல்வாக்கு ஔயல்ல
சிங்கார முள்ளபடிக் காசுப்புலவன் பெருந்
தீரனை யாண்டியல்ல

மெத்தசி த்ரக்கவிப் பொய்யாமொ ழிப்புலவன்
மேற் சுப்ரமண்யனல்ல
மேதினி தனைபுகழ்ந் தோதிடு மருணகிரி
மேன்மைமிகு மூவரல்ல

முத்தர்புகழ் தென்மதுரை முக்கண்ண னுக்குந்
மூர்த்திவடி வேலனருளால்
மொழியுமிக் கீர்த்தனமிதிற் பிழையிருக்கினு
முதியோர் மன்னிப்பர் மாதோ.

வெண்பா.

அத்திமுக னுக்கிளைய வாறுமுகன் றன்னருளாற்
பக்திரசக் கீர்த்தனங்கள் பாடினன்யான்—எத்தினமும்
வித்தகர்கள் பொற்பதத்தை வைத்தெனந்த னற்சிரத்தில்
முத்தமிழ் சந்தச்சரப முன்.

பக்திரசக்கீர்த்தனங்கள்
முற்றுப்பெற்றது.